ஸ்ரீ

# அப்பளப் பாட்டு

## பல்லவி

மீண்டும் சாப்பிட வேண்டும் என்று ஆசை எழாதபடி ஆசையை தீர்த்துக்கட்டும் (ஆன்மாவான) அப்பளத்தை, இட்டு, சாப்பிட்டுப் பாரு

## அநுபல்லவி

இந்த உலகில் கவலைப்பட்டுத் திரியாது, உண்மையைப் போதிக்கின்ற சத்குருவானவர் சொல்லாது சொன்ன ஒப்பு-உயர்வு இல்லாத (நான் யார் என்ற) ஓர் மொழியின்படி

(அப்பளம் இட்டு பாரு)

## சரணங்கள்

1. தன் சொரூபமல்லாத, பஞ்ச கோசங்களாலாகிய உடலில் வளரும் ''நான்'' என்னும் தானியமான உளுந்தை, விசாரம் என்னும் இயந்திரத்தால் ''தேகம் நான் அல்ல'' என்று உடைத்துப் பொடியாக்கி

(அப்பளம் இட்டு பாரு)

2. ஜீவன் முக்தர்களின் சத்சங்கம் என்ற பிரண்டை ரசத்தை சேர்த்து மன அடக்கம், புலனடக்கம் என்ற (சமம்-தமம்) மிளகு, ஜீரகம் இட்டு, பற்றுதலை ஒழிக்கும் உபரதி என்னும் உப்பை இட்டு, சுபவாசனை வடிவான பெருங்காயத்தை சேர்த்து

(அப்பளம் இட்டு பாரு)

ஸ்ரீ

# அப்பளப்பாட்டு

## பல்லவி

அப்பள மிட்டுப் பாரு — அத்தைச்
சாப்பிட்டுன் னுசையைத் தீரு.

## அநுபல்லவி

இப்புவி தன்னி லேங்கித் திரியாமற்
சற்போ தசுக சற்குரு வானவர்
செப்பாது சொன்ன தத்துவ மாகிற
வொப்புயர் வில்லா வோர்மொழி யின்படி — (அப்)

## சரணங்கள்

தானல்லா வைங்கோச க்ஷேத்ர மிதில்வளர்
தானென்னு மானமாந் தான்ய வுளுந்தை
நானுரென் ஞான விசாரத் திரிகையி
னுனல்ல வென்றே யுடைத்துப் பொடித்து — (அப்) 1

சத்சங்க மாகும் பிரண்டை ரசத்தொடு
சமதம மாகின்ற ஜீரக மிளகுட
னுபரதி யாகுமவ் வுப்போ டுள்ளநல்
வாசனை யாம்பெருங் காயமுஞ் சேர்த்து — (அப்) 2

3. ‘நான்-நான்’ என்கிற உறுதியான கல்லில் கலக்கத்திற்கு இடந்தராது உள்முகப் பார்வை எனும் உலக்கையால் ஓயாமல் இடித்து, சாந்தமே வடிவான குழவி கொண்டு சமபாவமான பலகையில் சலிப்பு இல்லாமல் சந்தோஷமாக

(அப்பளம் இட்டு பாரு)

கன்னெஞ்சி ஞனு னென்று கலங்காம
லுண்முக வுலக்கையா லோயா திடித்து
சாந்தமாங் குழவியாற் சமமான பலகையிற்
சந்ததஞ் சலிப்பற சந்தோஷ மாகவே — (அப்) 3

4. மௌன அடையாளம் காட்டும் பரவெளியாகும் முடிவில்லா பாத்திரத்தில் அஞ்ஞானத்தை சுட்டுப் பொசுக்கும் ஞான அக்கினியால் காய்கின்ற சுத்த பிரம்ம வடிவான நல்ல நெய்யில், அப்பளத்தை இட்டு நான் அந்த பரப்பிரம்ம சொரூபமேயானவன் என்று எப்போதும் அப்பளத்தை பொரித்து தானே தானாக தன்மயமாகிய அந்த அப்பளத்தைச் சாப்பிடுவாயாக.

மோனமுத் ரையாகு முடிவில்லாப் பாத்ரத்தில்
ஞானக்னி யாற்காயு நற்பிரம்ம நெய்யதி
னனது வாகவே நாளும் பொரித்துத்
தானே தானக புஜிக்கத் தன்மய — (அப்) 4

*<u>அப்பளப் பாட்டு:</u>*

*அன்னை அழகம்மை பகவானுடன் விருபாக்ஷ குகையில் வசிக்கத் தொடங்கிய காலத்தில், ஸ்ரீபகவானுக்கு இரட்டை அப்பளாமென்றால் பிடிக்குமே, அதை செய்யலாமே என்று அன்னைக்கு தோன்றியது.*

*ஸ்ரீபகவானுக்குத் தெரியாமல் எச்சம்மாள், முதலியார் அம்மாள் போன்றவர்களிடம், முன்பே அப்பளத்திற்கு வேண்டிய சாமக்ரிகள் எல்லாவற்றையும் தயாராக வைக்கச் சொல்லி, ஒருநாள் மாலை ஊருக்குள் போய்விட்டு வருகிறேனென்று ஸ்ரீ பகவானிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் அழகம்மை.*

*அவர் எங்கு போகிறார் என்பதை மரத்தடியிலிருந்து ஸ்ரீ பகவான் பார்த்துக் கொண்டே இருந்தார், டவுனுக்குச் சென்ற அழகம்மை தயாராகவிருந்தர, அப்பளமிடுவதற்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு விருபாக்ஷ குகைக்கு வந்து அவற்றை பத்திரமாக வைத்துவிட்டார். ஸ்ரீ பகவான் ஒன்றும் தெரியாதவர் போல் இருந்துவிட்டார்.*

*தரிசனத்திற்கு வந்தவர்களெல்லோரும் சென்ற பிறகு ஸ்ரீ பகவான் இருப்பதை சாப்பிட்டுவிட்டு படுத்துவிட்டார். சாவாகாசமாக அம்மா எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு அப்பளம் இடுவதற்குத் தயாரானார். சுமார் இருநூறு முன்னூறு உருண்டைகள் இருந்தன. தனியாக அவ்வளவையும் அப்பளமாக்க முடியாது. ஸ்ரீபகவானுக்கு அப்பளமிடத் தெரியும் என்பது அழகம்மைக்கும் தெரியும். ஆகையால் மெதுவாக ஸ்ரீ பகவானிடம் அப்பளம் இடுவதற்கு ஒத்தாசை செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.*

*இதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்று ஸ்ரீபகவான் அம்மாவை பார்த்து, “நீ எல்லாவற்றையும் விட்டுவிட்டாயல்லவா! கிடைத்ததைச் சாப்பிட்டு சும்மா கிடக்காமல் இவையெல்லாம் எதற்கு! நான் அப்பளம் செய்ய வரமாட்டேன். நீ செய்தாலும் சாப்பிட மாட்டேன். எல்லாவற்றையும் நீயே பண்ணி நீயே சாப்பிடு” என்று சொல்லி சும்மாயிருந்து விட்டார்.*

*அன்னையும் சிறிது நேரம் சும்மாயிருப்பதும், திரும்பவும் கூப்பிடுவதுமாயிருந்தார். அம்மா தன்னை விடமாட்டார் என்று தோன்றியது ஸ்ரீபகவானுக்கு. சரி, அப்படியானால் “நீ இந்த அப்பளம் செய். நான் வேறு ஒரு அப்பளம் செய்கிறே” னென்று, மேற்கண்ட அற்புதமான ஞான பொக்கிஷமாகிய “அப்பளப்பாட்டை” அன்னையை முகாந்திரமாக்கி நம் அனைவருக்கும் ஸ்ரீ பகவான் பாடியருளினார்.*